அறப்போர்

ஆசிரியர்: அரங்கண்ணல்

8 பக்கங்கள் ★ ஒளி-3 12-7-'63 வெள்ளி கதிர்--18 ★ 16 காசு

சர்க்காரைச் சந்திக்கிழுத்த

சிரசவல்லி

இலண்டன் வட்டாரத்தின் மிகப் பெரிய மனிதராக விளங்கிய டாக்டர் வார்டு மிக மிகக் கீழ்த்தரமான செய்கைகளில் 'கீர்த்தி' பெற்றவர் என்பது சிலருக்கேத் தெரியும்! அந்தச் சிலரும் சீமான்கள்!! அச்சீமான்களைத் தனது அழகிய ஓவியக் கூடத்துக்கு இட்டுச் செல்வார். தான் தீட்டிய ஓவியங்களைக் காட்டுவார். அத்தனையும் பெண் ஓவியங்கள்தான்! நட்பு வளர வளர, தான் இரகசியமாக எடுத்தப் புகைப் படங்களைக் காட்டுவார்! நட்புத் தொடர்பாகி நெருக்கம் அதிகமாக அதிகமாக இரகசியமாக எடுக்கப்பட்ட சினிமாக்களும் காட்டப்படும்! புகைப்படங்களும் சினிமாவும், செச்செச்சே அத்தனையும் சிருங்கார ரசங்கள்தான்!!

எப்படித்தான் பெண்டிர் அப்படிப்பட்டப் படங்கள் எடுக்க அனுமதித்தனரோ? ஆடையின்றி! ஆடவரோடு! கேளிக்கை புரிந்தபடி!——வித விதமான வகைகளில்!!

விசாரம் தீர்க்கும் இடம் விருந்தளிக்கும் திருத்தலமாக, பிரபுக்களாலும் பெரிய மனிதர்களாலும் அவருடை உல்லாச மாளிகை கருதப்பட்டது.

அதிலே ஒரு அறை இருக்குமாம்! அங்கே ஒரு புத்தர் சிலை இருக்குமாம்! அந்தச் சிலையை நகர்த்தினால் ஒரு கண்ணாடி தெரியுமாம்! அந்தக் கண்ணாடி வழியே பார்த்தால் அடுத்த அறைக்குள் நடப்பதெல்லாம் தெரியுமாம்! அதே சமயம் அறைக்குள்ளிருப்பவர்களுக்கு வெளியிலிருந்து தங்களைப் பார்க்கிறவர்கள் தெரியாதாம் அப்படிப்பட்ட கண்ணாடி அது!!

டாக்டர் வார்டின் அந்த அலங்கார அறைக்குச் சென்ற ஒருவர் கூறுகிறார், கொஞ்சம் எமைமன்னித்துவிட்டுஅதனைப் படியுங்கள்: "இதன் வழியே பாருங்கள் என்றார். பார்த்தேன்! உள்ளே கட்டில்கள். அவைகளில் நான்கு ஜோடிகள் நீக்ரோ பெண்கள், ஆண்கள் வெள்ளைப் பெண்கள் ஆண்கள் ...சேச்சே! நான் உடனே திருப்பிக்கொண்டேன் முகத்தை. டாக்டரோ, என்னைப் பார்க்கச் சொன்னார். மறுபடியும் பார்க்கலாம் என்று நான் நினைத்தபோது, என்னை நகர்த்திவிட்டு, புத்தர் பொம்மையை எடுத்து கண்ணாடி தெரியாதபடி மறைத்து விட்டுத் தன்னுடைய தத்துவம் பற்றிப் பேசலானார்."

என்ன தத்துவம் தெரியுமா? உலகத்தையே இனக் கவர்ச்சியின் மூலமாகப் புனர் அமைப்புச் செய்வது டாக்டரின் தத்துவமாம்! அழகான, டாக்டர்! அற்புதமான தத்துவம்!!

தன் தத்துவத்தை விவரிக்கிறார், டாக்டர், கேளுங்கள் :— "உலகம் உய்ய வேண்டும் என்பதற்கு மனிதன், தான், தோன்றிய நாள் முதல் முயற்சித்து வருகிறான். அரச பீடம், ஏகாதிபத்தியம், காலனியாதிக்கம், ஜனநாயகம், சோஷியலிசம், கம்யூனிசம், பாசிசம் என்றெல்லாம் பற்பல முறைகளைப் போதித்தாலும் அவன் இன்னும் உலக நல்வாழ்வுக்கு ஒரு முடிவு காணவில்லை. அதனால் நான் ஒரு புது வழி காண்கிறேன். மனிதன் '......' இந்த வழியில்தான் முன்னேற முடியும். எனக்கு மக்களின் மனோபாவம் தெரியும். அரசியலிலும் ஆண் பெண் உறவு விவகாரங்களிலும் நான் நிரம்பப் படித்துக் கரை கண்டிருக்கிறேன். அதனால், அரசியலையும் ஆண் பெண் கவர்ச்சியையும் நன்றாகச் சேர்த்துவிட்டால் தகராறுகளே குறைந்துவிடும். எப்படி என் தத்துவம்!"

தவறான வழியில் செல்கிறவன் அதை நியாயமென்று வாதிக்க ஆரம்பித்து, ஓரிருவர் ஒப்புக்கொண்டால் அதையே தத்துவம் என்று விரும்புவானல்லவா? அதே போல டாக்டரும் தனது மட்டரக

அரங்கண்ணல்

மான போக்குக்கு 'மகத்துவம்' கற்பிக்க ஆரம்பித்தார்!

இந்தக் கேடுகெட்ட ஆளைப் பிடித்துப் பிரிட்டிஷ் அரசு வழக்குப் போட்டிருக்கிறது. கடந்த வாரம் வழக்கு நடந்த போது, இருபெண்கள், டாக்டரின் மோசமான நடத்தை பற்றிச் சாட்சியம் சொல்லியிருக்கிறார்கள். அப்பெண்கள் சொல்லச் சொல்ல, குற்றவாளிக் கூண்டிலே நின்ற இந்தக் கோணல் மதியாளன் என்ன செய்து கொண்டிருந்தானாம் தெரியுமா? குறிப்புகள் எழுதவென்று காகிதமும் பென்சிலும் கேட்டு, வாங்கி அவர்களுடைய படத்தை ஓவியமாக வரைந்து கொண்டிருந்தானாம்!!

அவனோடு பழகிய கோலாபவாலா என்கிற இந்திய எழுத்தாளர் சொல்கிறார், "நான் இப்படிப்பட்ட விந்தையான ஆளை எங்குமே சந்தித்ததில்லை. உலகத்தில் தகராறுகளே இல்லாமற் செய்துவிடலாம் என்பான். எப்படியென்றுகேட்டால் உலகத்திலுள்ள ஒவ்வொரு மனிதனும் அவனவனுக்குப் பிரியமான பெண்களோடு உறவாடவேண்டும். இந்தியாக்காரி, ஆப்ரிகாக்காரி, ஆங்கிலேயமாது, ஜெர்மானியாள், பிரஞ்சுதேசத்தாள், இப்படிப் பலரோடும் உறவாடினால், மனிதனைப் பீடித்திருக்கிற வேற்றுமை போய் விடும். எல்லோரும் எல்லோரையும் அனுபவிக்கலாம். உலகில் வித்தியாசங்களை ஒழிக்க எவ்வளவு அற்புதமான தத்துவத்தைக் கண்டு பிடித்திருக்கிறேன், என்பான். சாதிமத பேதம் நிறவேற்றுமை எல்லாம் என் தத்துவத்தால் ஒழியாதா என்று கேட்பான். முதலில், நான் அவனை ஒரு பைத்தியம் என்றே எண்ணினேன். ஆனாலும், அவனிடம், பிறரை வசீகரிக்கும் ஒருவிதமான சக்தி இருந்தது. இனிமையாகப் பழகுவான், அதனால், விம்போல் மியூஸ் என்னுமிடத்திலிருந்த அவன் இடத்துக்குப் பல தடவைகள் போயிருக்கிறேன். அதேபோல, இப்போது உலகமே அதிர்ச்சியடையும் அதாவது உல்லாச புரியான கிளைப்டன் காட்டேஜாக்கும் சென்றிருக்கிறேன். 'மியூஸ்' என்கிற இடத்திலிருந்த மாடி கிறீஸ்டீன் கீலருக்கு நன்றாகத் தெரியும். அவனுடைய கார் நிறம் தனிவிதமானது. இலண்டன் வட்டாரத்து சரசவல்லிகளுக்கும் பிரபுக்களுக்கும் அவன் காரைக் கண்டதுமே அடையாளம் புரியும். அப்படிப்பட்டவன் பேச்சைக் கேட்டபோது நான் அவனைப் பைத்தியக்காரன் என்றே நினைத்தேன். ஆனால், அவன் மட்டுமல்ல, அவன் சொன்ன தத்துவப்படி உலகத்தின் பல பாகங்களிலும் இயங்குகின்ற கும்பல் ஒன்று நீண்ட நாட்களாக யிருந்துவருகிறது! பலருக்குத் தெரியாதே ஒழிய, பெரிய பெரிய ஆட்கள், ஒவ்வொரு நாட்டிலும் இந்த விநோத மாயைக்கு அடிமையாகி ஆங்காங்கும் இதே மாதிரியில் நடத்தி வருகிறார்கள்,"

என்கிறார், கோலாபாவாலா! விந்தையென்றே எண்ணத் தோன்றும்! உலக முழுமைக்கும் இப்படியொரு இயக்கம் இருக்கிறதா ?-என்று கேட்கத் தோன்றும்.

ஏழை, பசியால் சாகிறான்! அவனுக்கு வயிற்றுப் பசியைத் தீர்ப்பதற்கே நேரம் கிடைப்பதில்லை! ஆனால், தின்று கொழுத்துத் தத்துவம் பேசும் சீமானுக்கு உலகத்தில் என்ன பொழுதுபோக்கு இருக்கிறது? மேனி வாட அவன் உழைப்பதில்லையே! யாரோ உழைக்க யாரோ கொழுக்கும் நிலையிருக்கின்ற சமூகத்தில், உயரப்பனுக்கு இப்படியெல்லாம் மனம் செல்லத்தானே செய்யும்!! தஞ்சை போன்ற வளமான இடங்களில் வாழும் மிராசுதார்கள் 'வைப்பாட்டி' வைத்துக் கொண்டால்தான் கௌரவம் என்று கருதியிருந்த காலமும் உண்டன்றோ? இப்போதும் கற்பழிதலும் காமுறுதலும், காம சேவையே தன் வாழ்வின் பலன் என்று அலைவதுமான எத்தனை யெத்தனை அற்ப மனிதர்கள், பணக் கொழுப்பின் காரணமாக உலாத்துகின்றார்கள?

'ஒருத்திக்கு ஒருவன்' ஒருவனுக்கு ஒருத்தி,' என்கிற தமிழ் முறையின் பெருமையினை நாம் அறிவோம்! "ஆண்மை" என்றால் எது என்பது பற்றி விளக்கவந்த திருவள்ளுவப் பெருந்தகையும், தன் மனையாளிருக்க இன்னொருத்தியின் மீது காமுறாமல் இருப்பதுதான் ஆண்மை, என்கிறார்!! இத்தகைய நல்லதொரு பண்பாடு கொண்ட நமக்கு, கிறீஸ்டின் கீலரின் சதியும் டாக்டர் வார்டின் தத்துவமும், காறித்துப்பக் 'கூடியச் செயலாகவே தோன்றும். ஆனால், இந்தச் சம்பவத்தால் பிரபுயூமா என்கிற ஒரு பெரிய வீரனே வீழ்ந்தான்! பிரிட்டிஷ் அரசாங்கமே களங்கம் பெற்றிருக்கிறது!!

அப்படிப்பட்ட இழி நிலை, தவறான வழி செல்லும் தனி மனிதனுக்கு மட்டுமல்ல அரசுகளுக்கும் ஏற்படும். வீட்டில் மல்லிகையிருக்கும் போது வெளியில் மின்னும் கனகாம்பரத்தின் மீது ஆசைப்படுவதால் எத்தனை யெத்தனை கொலைகள் நிகழ்கின்றன!!

அண்மையில் நான் ஒரு "கொலைக் கதை" படித்தேன். அமெரிக்காவில், உண்மையாகவே நடந்ததாம். கணவனைக் கொன்று உருட்டினாள் ஆற்றில் ஒரு காரிகை! கெட்டவளல்ல, அவள். அவனும் அவளும் காதலித்துத்தான் கடிமணம் செய்து கொண்டனர். குழந்தைகள் வேறுண்டு. அப்படிப்பட்ட அம்மாது ஒருநாள் கடலோரம் சென்றாள்! அக் கடலோரத்தில், தன் கணவனின் நண்பனைச் சந்தித்தாள். அவன் அங்கே ஒரு விழாவுக்கு வந்திருந்தான். விழாவுக்கு அவளையும் அழைத்தான். ஏதோ விளையாட்டு என்று கருதி அவளும் போனாள். அவளைப் போல பல பெண்கள் வந்திருந்தார்கள். அதேபோல பல ஆடவர்களும் அங்கு இருந்தார்கள். அத்தனை பேரும் கணவனும் மனைவியுமாவார்கள். ஆனால், அந்த நகரத்தின் பிரபுக்குலம் அவர்கள்! அவளோ, ஒரு ஏழை இன்சினீயரின் மனைவி. அவர்களிலே ஒருவன் கையில் தொப்பியிருந்தது. அதற்குள் பல சாவிகள் கிடந்தன. அந்தச் சாவிகளில் ஒவ்வொருவருடைய பெயரும் எழுதப்பட்டிருந்தது. அந்தத் தொப்பியை, ஏழையின் மனைவியிடம் நீட்டி, இதிலிருந்து ஒரு சாவியை எடு என்றான் நண்பன். என்னமோ. விளையாட்டு என்று எடுத்தாள் அவள். ஒரு பிரபுவின் பெயர் வந்தது. அந்தப் பிரபுவுடன் கொஞ்ச தூரம் போய்வா என்றனுப்பினான் அவன். அவளும் கவடு சூதில்லாமல் சென்றாள்! மாளிகையொன்றில் நுழைந்தாள்!!......பலியானாள்' புதியருசி கண்டாள் மாதத்தில் ஒருநாள், அந்த நகரத்தின் பிரபுக்கள், அங்கே கூடி தொப்பியில் சாவிகளைப் போட்டுவிட்டு எந்தச் சாவியை எந்தப் பெண் எடுக்கிறாளோ அந்தப் பெண் சாவிக்குரியவனோடு அந்த இரவைக் கழிக்க வேண்டும் என்று ஒரு விளையாட்டு விளையாடி வந்திருக்கிறார்கள். தன் மனைவி இன்னொருத்தனோடு செல்வதைப் பார்ப்பானாம் கணவன். ஆனால் அதே சமயம் இன்னொருத்தன் மனைவி தனக்குக் கிடைப்பதை எண்ணி மகிழ்வானாம்...இந்த விளையாட்டிற்குப் 'பலி'யான அந்த ஏழை, மறுபடியும் மறுபடியும் ஈடுபடலானாள்! கணவனுக்குப் புரிய வந்தது. தடுத்தான். கணவனையே, கொன்றாள்!!—இது, நடந்த கதை அமெரிக்காவில்.

சமூகம் இப்படியெல்லாம் கெடாமல், கட்டு திட்டங்களோடு வாழ்வதுதான் நமது பண்பாடு! ரஷ்யாவில், 'விபசாரம்', 'பரசாரம்' என்பது கடுமையான குற்றமாம். கடுந்தண்டனையாம் இதற்கு அங்கே சீமானில்லை! எனவே, செல்வத்தால் கற்பைச் சூறையாடும் கெடுமதியில்லை!!

முதலாளித்துவ நாடுகளில் இந்த மூர்க்கப் புத்தி அவ்வளவாக ஒழியவில்லை. அதற்காகப் பாடுபட்டு வருகிறார்கள் பல நல்லவர்கள்! ஆனால் டாக்டர் வார்டு, எதனைக் கெடுதல் என்று உலகம் கருதுகிறதோ, அதனையே 'தத்துவம்' என்று

(7—ம் பக்கம்பார்க்க)

சனநாயகம்!

இந்த "ஜனநாயகம்" எனும் சொல்லைப் பெற, மக்களாட்சி எனும் மாண்புறு புதுமையைக் காண, நடத்தப்பட்டிருக்கும் போராட்டம் மிக மிகப் பெரிது. வல்லான் வகுத்ததே வழி! மன்னன் விருப்பமே மகேசன் கட்டளை!—என்று இருந்த நிலை மாறி, மக்களின் எண்ணங்களே ஒரு நாட்டினை ஆளவேண்டும் என்பதற்காக நடைபெற்ற இரத்தக் களரிகள் மிகப் பெரிதாகும் நாகரீகம் வளராத நாட்களிலே, வல்லவன், தலைவனானான். அவனுக்குத் தெரிந்த கூட்டத்தை அவன் அடக்கியாண்டான். அவனது புஜபல பராக்கிரமத்தைக் கண்டு மாற்றார் மருண்டனர்; உற்றார், முழங்காலிட்டுத் தொழுதனர். பிறரது படையெடுப்பினின்று தங்களைக் காக்கவும், தங்கள் தேவைக்கான பொருள்கள் கிடைக்கும்படிச் செய்யவும், மன்னனிருக்கிறான் என்று மக்கள் கருதினர், மன்னனுயிர்த்தே மலர் தலையுலகம், என்று எண்ணப்பட்டது. அப்படிப்பட்ட மன்னன், நல்லவனாகயிருந்தால், நாடு வாழ்ந்தது. தீயவனாகயிருந்தால் தீமைகள் மலிந்தது. மதுவும் மங்கையுமே வாழ்வெனக் கருதி, வசூலிக்கப்படும் வரிகளை யெல்லாம் கொட்டி அழித்துவிட்டு, களஞ்சியம் காலி என்றபோது, புதுப் புது வரிகளைப் போட்டு, கட்டாதாருக்கு கிட்டி கட்டி, 'தர்பார்' நடத்தியபோது, மக்கள் விழித்தனர். அந்த விழிப்பிலிருந்து, விளைந்ததொரு சொல்தான், மக்களாட்சி! ஜனநாயகம்!!

கவனிக்க

'அறப்போர், சம்மந்தமாக கடிதம் எழுதுவோர், 'நிர்வாகி, அறப்போர், 9. ஏ. டாக்டர் சி. பி. ஆர். ரோடு, சென்னை-18.' என்ற முகவரிக்கு எழுதுக.

அறப்போர்

ஆசிரியர்: அரங்கண்ணல்

சந்தா விவரம்

உள்நாடு
ஆண்டு சந்தா 8—00
6 மாத சந்தா 4—50
வெளிநாடு
ஆண்டு சந்தா 9—00
6 மாத சந்தா 5—00

ஒளி - 3 | 12-7-'63 வெள்ளி | கதிர் - -18

அவர்கள் வாயாலேயே வரும்!

அமெரிக்கா சென்று திரும்பிய அன்பர் பக்தவத்சலனார் திருவண்ணாமலை கொடுத்த அடியின் வேகந்தாங்காது அடுத்த நாளே பத்திரிகையாளரிடம் சொன்னாராம், 'தி. மு.க-வின் பிரிவினைக் கொள்கை நீடித்தால் இது பற்றி அரசு தக்க நடவடிக்கை எடுக்கும்' என்று.

நடவடிக்கையே எடுக்காத அரசல்ல நடப்பது! நடவடிக்கைகளையே காணாதவர்களுமல்ல கழகத்தவர்கள்!—எனவே அமைச்சரின் கூற்றினை, அதிர்ச்சியில் விளைந்த பிரசவம் என நாம் தள்ளிவிடுகிறோம். அரசாங்கம் முடிவுகள் எடுக்கும்போது அதற்கேற்ற முடிவுகளை எடுக்க நமது தலைவருக்குத் தெரியும். பொது வாழ்க்கை என்பது பூந்தோட்டம் — சலவைக்கல் மாளிகை—சப்ரகூட மஞ்சம் என்றெண்ணியிருக்கிறவர்களும் அல்ல நாம்.

ஆனால், அமைச்சர் எந்தப் 'பிரிவினை'க் கொள்கை நீடித்தால் நடவடிக்கை எடுப்பேன் என்கிறாரோ அதே நாள், அதே 'பிரிவினை'க் கொள்கை ஆந்திர முதலமைச்சர் சஞ்சீவி ரெட்டியாரின் வாயிலிருந்தே வந்திருக்கிறது! சஞ்சீவி ரெட்டியார், காங்கிரஸ் தலைவராக யிருந்தவர், ஆந்திர மாநிலத்தின் முதல் அமைச்சர்.

அமைச்சர் நடவடிக்கை யெடுப்பேன் என்று பத்திரிகையாளரிடம் சொன்ன அதே நாளில் திருச்சி திருவெறும்பூர் தொழில் நுட்பப் பள்ளித் திறப்பு விழாவில் காமராசரும், சஞ்சீவி ரெட்டியும், கனரக இரும்பு அமைச்சர் சுப்பிரமணியமும் கலந்து கொண்டிருக்கிறார்கள். அப்போது பேசிய 'கனம்' சுப்பிரமணியம் சொன்னாராம், 'இதைப் போன்ற தொழிற்சாலைகளில் வேலை வாய்ப்பு அளிப்பதில் மாநில உணர்ச்சிக்கு இடம் அளிக்கக் கூடாது. தேசீயத் திட்டங்களில் எந்த மாநிலத்தவராயினும் இடம் பெற உரிமை யுண்டு. அரசுத் தொழில்கள் தங்களுக்கே உரியவை என்றும் அவற்றில் தங்கள் மாநில மக்களே வேலை வாய்ப்புப் பெற வேண்டும் என்று கருதுவது தவறு", என்பதாக! டில்லி மந்திரியாகிவிட்டாரல்லவா? அந்தச் செய் நன்றியைக் காட்டியிருக்கிறார் கனரக இரும்பு!!

ஆந்திர சஞ்சீவியார் அடுத்துப் பேசும்போது, 'பிற மாநிலங்களில் ஆயிரக் கோடிக்கணக்கான ரூபாய் செலவழிக்கப்படுகையில் ஆந்திரம் மிகவும் புறக்கணிக்கப் பட்டிருக்கிறது. ஆந்திரத்தில் 10 கோடி ரூபாய் கூடத் தொழில்களுக்காக முதல் இரு திட்டங்களில் செலவிடப்படவில்லை. தொழிற்சாலையில் வேலை வாய்ப்பு அளிப்பதில் மாநில வாரியாக முக்கியத்துவம் அளிப்பது என்பது இயலாது. தொழிற்சாலை அமையும் மாநிலத்தைச் சேர்ந்தவர்களுக்கே வேலையளிப்பதில் முக்கியத்துவம் அளிக்க வேண்டும். ஆந்திர மாநிலத்தில் நிறுவப்பட்ட ஒரு தொழிற்சாலையில் வடநாட்டுக்காரர்கள் ஏராளமான பேருக்கு வேலை வாய்ப்புகள் அளிக்கப்பட்டன. அதனால் பல இடையூறுகள் விளைந்தன. எனவே இதிலெல்லாம் தேசீய நோக்கு அவ்வளவாகப் பயன் படாது."

டில்லியில் அமைச்சராக இருக்கிற காரணத்தால் சுப்பிரமணியம் 'தேசீயம்' பேசுகிறார்! சஞ்சீவி ரெட்டியார் 'இதிலெல்லாம் தேசீய நோக்கு பயன் படாது' என்கிறார்—தீர்மானமாகச் சொல்கிறவர், வடவருக்கு இங்கேன் வேலை, என்பதாக!!

இதையே நாம் சொன்னால் 'பிரிவினைக் கேட்கிறோம்' என்பார் பக்தவத்சலம்! ஆந்திர முதலமைச்சரே சொல்கிறாரே!!

தடை போட்டு கழகத்தைப் பூட்டி, புளகாங்கிதமடைய அமைச்சர் குழாம் துடிக்கலாமே யொழிய, என்றும் நம்முடைய கொள்கையைப் பூட்டிவிட முடியாது. காலம், கனியக் கனிய அவர்கள் வாயாலேயே வரும். ஏனெனில் நாம் பொய் மாளிகையை யல்லவா காட்டுகிறோம்! எது சாத்யமோ அதைத்தான் சொல்கிறோம்!!

வாழ்க மணமக்கள்!

தலைமை நிலையச் செயலாளர் மதியழகன் அவர்களது இளவல் திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்களுக்கும் சூலூர் ஆர். எஸ். முனியப்ப (பிள்ளை) மகள் புனிதவதிக்கும் சூலூர் சண்முக தேவி தியேட்டரில் 1—7—63 அன்று நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தலைமையில் திருமணம் நடைபெற்றது.

கழக முன்னணித் தலைவர்களும் மற்றும் பலரும் மணமக்களை வாழ்த்தி உரையாற்றினர். ஏராளமான வாழ்த்துத் தந்திகள், பரிசுப் பொருள்கள் வந்திருந்தன

இறுதியில் மணமகன் கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் நன்றி கூற விழா இனிது முடிவுற்றது.

வெற்றி கண்ட வீரருக்கு சென்னை தந்த வரவேற்பு!

★ அடடா, என்னே ஊர்வலம்! எவ்வளவு மக்கள்!! ★

நாடு எதிர்பாராத நல்ல வெற்றியை தேடித் தந்தது திருவண்ணாமலை; ப. உ. சண்முகம் வெற்றியை கொண்டாடி மகிழ மாபெரும் வரவேற்பும்—அந்த மகிழ்ச்சியை ஊரறியும் விதத்தில் ஊர்வலமாக கொண்டாடி மகிழ்கிறோம்!

ஓராண்டு காலத்திற்கு முன் சட்ட மன்றத்தில் ஒலித்த வெண்கலக் குரல் ஒரு வருட காலமாக ஒலியிழந்திருந்தது. சட்ட மன்றத்தில் மீண்டும் அந்த வெண்கலக் குரலின் ஒலி எழும்பப் போகிறது! ஒரு வருட காலமாக குறுக்குக் கேள்விகளை சந்திக்காதிருந்த சட்ட மன்றம் குறுக்குக் கேள்விகளை சந்திக்கும் காலம் நெருங்கி விட்டது.

கடந்த பொதுத் தேர்தலில் தோழர் சண்முகம் சில பல கோளாறுகளால் வரமுடியாத நிலை ஏற்பட்டது! வரவேண்டியவர் சண்முகம்தான் எனக் கருதியோ என்னவோ எதிர்பாராத துக்க நிகழ்ச்சி ஒன்று திருவண்ணாமலையில் நடந்து விட்டது. அதன் காரணமாக ஏற்பட்ட இந்த இடைத் தேர்தலில் ஆட்சியாளர்களை எதிர்த்து ப. உ. சண்முகம் கழகத்தின் சார்பில் போட்டியிட்டார்! எந்த வெண்கலக் குரலின் ஒலியிழந்து கிடந்த சட்ட மன்றம் ப. உ. சண்முகத்தை வரவேற்கிறது. அதனால் நம்மவர்கள் நாவலரின் தலைமையில் 50 பேராக இருந்தவர்கள் 51 பேராகிவிட்டனர் சட்ட மன்றத்தில்!

சனநாயகப் பணியில் நம்மவர்கள் கண்ணும் கருத்துமாக நின்று உழைத்து சனநாயகத்தை காப்பாற்றி யுள்ளோம்! சனநாயகத்தைக் காக்கக் கூடிய கட்சி கழகம்; இதிலே தான் நமக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி ஏற்படுகிறது.

ஒரு சில காங்கிரஸ்காரர்கள் எங்காவது ஓரமாக நின்று கொண்டு "இது என்ன பெரிய வெற்றி! இதற்கு ஏன் இவ்வளவு பெரிய ஆரவாரம்! நாங்களும்தான் வெற்றி பெற்றோம் நாங்குனேரியிலும்; போடியிலும்! இத்தனை ஆரவரமா செய்தோம்!' என்று பேசிடுவார்கள்!

சங்கே முழங்கு!

எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
மங்காத தமிழென்று சங்கே முழங்கு!
எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார்,
இங்குள்ள தமிழர்கள் ஒன்றுதல் கண்டே!

திங்களோடும் செம்பரிதி தன்னோடும் விண்ணோடும்
உடுக்களோடும்
மங்குல் கடல் இவற்றோடு பிறந்த தமிழுடன் பிறந்தோம்
நாங்கள் ஆண்மை
சிங்கத்தின் கூட்டமென்றும் சிறியோர்க்குஞாபகம் செய்
முழங்கு சங்கே

சிங்களஞ்சேர் தென்னாட்டு மக்கள்
தீராதி தீரரென் றூ தூது சங்கே!
பொங்கு த்மிழர்க் கின்னல் விளைத்தால்
சங்காரம் நிசமென சங்கே முழங்கு!

வெங்கொடுமைச் சாகாட்டில் விளையாடும்தோளெங்கள்
வெற்றித் தோள்கள்!
கங்கையைப் போல் காவிரிபோல் கருத்துக்கள் ஊறு
எங்கள் உள்ளம்! [முள்ளம்
வெங்குருதி தனிற்கமழ்ந்து வீரஞ்செய்கின்ற தமிழ்
எங்கள் மூச்சாம்!

இந்தச் சக்தியா தேயும்! மாயும்!!

அண்ணா எழுப்பிய சங்கநாதம்

திருவண்ணாமலை வீரர் ப. உ. ச. அவர்களுக்கு சென்னை மாவட்டச் சார்பில் தரப்பட்ட வெற்றி ஊர்வலத்தைக் கண்டோரெல்லாம் வியந்தனர்! 'இந்தக் கட்சியையா தடை செய்யப் போகிறோம் என்கிறார்கள்!' என்றே பேசினர். கடல் மணலில், சென்னையின் சகல தர மக்களும் கூடினர். அப்போது அண்ணா பேசிய பேச்சு குறிப்பிடக் கூடிய ஒன்றாகும், அது, இது.

குழந்தையைப் பெற்றெடுத்த தாய், அந்தக் குழந்தை அம்மா என்று சொல்லுமுன் அம்மா என்று சொல்ல வாயை அசைக்கும் முன்னரே தாய் அக்கம் பக்கத்து வீடுகளுக்கெல்லாம் ஓடோடிச் சென்று "வாருங்கள் வாருங்கள் என் குழந்தை அம்மா என்று கூப்பிடுகிறது" என்று சொல்லி மகிழ்வாள். ஒருசில வீடுகளில் உள்ள தாய்மை அடையாத தாய்மார்களும்— மணமாகாத பெண்களும் "இது என்ன அதிசயம்" என்று சொல்வார்கள்!

அதைப்போல்தான் நாம் பெற்ற வெற்றி கண்டு மனமாச்சரியத்தில் சிலர் பேசுவார்கள்! ஆனாலும் நாம் பெற்ற வெற்றி மிகப் பெரிய வெற்றி சனநாயகம் பிழைக்குமா; காங்கிரஸ் எதேச்சாதிகார வெறியர்களிடமிருந்து சனநாயகத்தை காப்பாற்ற முடியுமா என்று யோசித்துக் கொண்டிருந்தார்கள் அரசியல்வாதிகள்.

போடியிலே வெற்றி வாகை சூடினோம், நாங்குனேரியில் வென்றோம் என்று காமராசர் பண்டிதர் நேரு பவனி வந்த பொழுது இதே கடற்கரையில் கூற, பண்டிதர் அம்ரோகா தொகுதியிலும், பருகா தொகுதியிலும் கண்ட தோல்வியின் வருத்தத்தை இந்த இரு வெற்றிச் செய்திகளும் போக்கடித்துவிட்டது.

நம்மால் முடியாத காரியத்தை நம்மின் பிரதமச் சீடன்செய்துமுடித்திருக்கிறாரே நீயன்றோ என் சீடன் என்று பாராட்ட வில்லை, திருவண்ணாமலை என்று கேட்க, திருவண்ணாமலை மட்டுமென்ன? அங்கும் காங்கிரசுதான்——நாம் தான் வெற்றி பெறுவோம்— என்று வீரமுடன் தைரியமாக சொல்லி பண்டித நேருவை நீங்கள் தைரியமாக டெல்லிப் பட்டணம் செல்லுங்கள், நான் திருவண்ணாமலை இப்படியே செல்லுகிறேன், எனக்கு முழு நம்பிக்கை உண்டு, காங்கிரசு தான் வெற்றி பெறும் என்று சொன்னார்.

பட்டக்காரர் மன்றாடியார் காங்கிரஸ் 5 ஆயிரம் வாக்குகள் அதிகம் பெற்று வெற்றி வாகை சூடும் என்றார்!

தமிழ் நாடு காங்கிரஸ் கட்சியின் தலைவர் 9 ஆயிரம் ஓட்டு வித்தியாசத்தில் காங்கிரசு வெற்றி பெறும் என்று சொன்னாராம்.

பத்ராசலம் பிள்ளை தேர்தல் நடைபெறும் முதல் நாள் தான் 30 ஆயிரம் ஓட்டு வித்தியாசத்தில் ப. உ. ச வை முறியடிப்பேன் என்று பத்திரிகை நிருபர்களிடம் கூறியுள்ளார்.

தேர்தலோடு முன்னேற்றக் கழகத்திற்குச் சமாதி செய்யப்படும். சண்முகம் தோற்பது உறுதி. இவ்வளவு ஆருடங்கள். அட்டகாசங்கள்; அதிகாரிகளின் மிரட்டல்; இத்தனையையும் கடந்து பெற்றவெற்றி மகத்தானதுதான்; இதில்ஐயப்பர்டுள்ளோர்கள் நம்மீது அருவருப்பு கொண்டவர்கள்தான் என்பதில் ஐயமில்லை.

இந்த வெற்றி பெருமைப் படத்தக்க வெற்றிதான். இந்த வெற்றியும் திருச்செங்கோடு வெற்றியைப்போல்மகிழத்தக்க வெற்றியென்பதில் ஐயமில்லை.

நாம் பெற்ற வெற்றியைப் பற்றி டெல்லி காங்கிரஸ் காரர்கள் சென்னைக் காங்கிரஸ்காரர்களைக் கேட்டார்களாம். அதற்கு அவர்கள் திருச்செங்கோட்டில் ரத்தக் கரை போஸ்டர்கள் போட்டிருந்தார்கள்.

கண்டார்கள் மக்கள்; ஐயோ போனால் போகட்டுமே என்று தி. மு. க, விற்கு ஓட்டுப் போட்டார்கள்! அதனால்தான் வென்றது தி.மு, க.என்றார்கள,

திருச்செங்கோட்டுத் தேர்தலின்போது அண்ணாத்துரை ஜெயிலிலிருந்தார். கருணாநிதியை சிறையிலடைத்து விட்டோம். ப. உ. ச, வை உள்ளே வைத்துவிட்டோம்! ஐயோ பாவம் இத்தனைப்பேரும் சிறையிலிருக்கிறார்களே என்று பரிதாபப்பட்டுஓட்டுப்போட்டார்கள் என்று சொன்னார்களாம்!

டெல்லி பாராளு மன்றத்தில் ஒரு சிலர் "நீங்கள் பயங்கர போஸ்டர்களை ஒட்டினீர்களாமே!" என்றார்கள்.

அரசியல்வெற்றியும்தேர்தல் வெற்றியும் சாதாரண போஸ்டர்களினால் ஏற்படுவதானால் அதற்குப் பஞ்சமே இல்லை. ஏராளமான போஸ்டர்களை போடலாமே என்றேன்.

ஆனால் இந்த திருவண்ணாமலை இடைத்தேர்தலில், நாங்கள் சிறையிலே அடிப்பட்ட போஸ்டர்களை ஒட்டவில்லை. எந்தவித பயங்கரமான போஸ்டர்களை ஒட்டவில்லை! ஆனாலும் வெற்றி எங்களுக்கே!!

இது ஏன் என்பதை மட்டுமல்ல; இதற்குக் காரணம் என்ன என்பதையும் காங்கிரஸ் மேலிடம் ஆராய வேண்டும்.

கடந்த தேர்தலில் ப. உ. சண்முகம் 1700 வாக்குகளில் தோல்வியுற்றார். முன்னைவிட எட்டு மந்திரிகள் முகாமிட்டும் அதிகாரத்தைப் பயன் படுத்தியும், பண மூட்டையைப் பரப்பிவைத்தும்—காலித்தனத்தை ஏவியும் 1500 ஓட்டு வித்தியாசத்தில் வெற்றி பெற்றிருக்கிறார் சண்முகம்.

அகில இந்திய காங்கிரஸ் இந்த வெற்றியையும்— தமது தோல்வியையும் நன்கு சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

திருவண்ணாமலையில் நான் சண்முகம் வீட்டிலிருந்தேன் அப்பொழுது அந்த வழியாக கம்யூனிஸ்டு நண்பர்கள் செங்கொடியுடன் ஊர்வலம் வந்தார்கள். கம்யூனிஸ்டு கட்சியினரின் ஊர்வலமாயிற்றே, அவர்கள் சமதர்மம் வளர்க! புரட்சி ஓங்குக! என்று முழங்குவார்கள் என்று நினைத்தேன்.

ஆனால், அவர்கள் "கிடைக்காது கிடைக்காது, திராவிட நாடு கிடைக்காது.போடாதே போடாதே, பிரிவினை சக்திக்கு ஓட்டு போடாதே என்ற கோஷங்களை போட்டார்கள்!

பிரிவினைவாதிகளுக்கு ஓட்டு போடாதீர்கள்—என்று எட்டு மந்திரிகளும் மக்களிடம் முறையிட்டார்கள்.

நாங்கள் பிரிவினைக்கு ஓட்டு கேட்கவில்லை. ஆனால், அவர்கள் மக்களிடம் 'கிடைக்காது கிடைக்காது திராவிட நாடு கிடைக்காது'. ஆகவே பிரிவினைக்கு ஓட்டுப் போடாதீர்கள் என்றார்கள்.

காங்கிரசுகாரர்களும் கம்யூனிஸ்டு நண்பர்களும் இப்படிப் பிரசாரம் செய்தும் வெற்றிப் பெற்றது நாமென்றால், கிடைத்த ஓட்டு யாருக்கு, பிரிவினைக்குத்தானே! கிடைத்த ஓட்டு பிரிவினைக்கு என்று தானே பொருள்!

"கோவில் என்றால் சீரங்கம் கோவிலைத்தான் குறிக்கும் அப்துல் சமத் என்ற முஸ்லீம் வாலிபர் பேசுவார் என்று சொல்வார்கள்? அப்துல் சமத் என்றால் முஸ்லீம் என்று சொல்லத் தேவை யில்லை.

அதுபோல் தி. மு. க. என்றால் பிரிவினைவாதிகள் என்று சொல்லத் தேவை இல்லை.

இன்று அரசியல் காற்று எந்தப் பக்கம் வீசுகிறது என்பதை அரசியலில் நீண்ட காலமாக இருந்து மறத்துபோன காங்கிரசு அரசியல்வாதிகள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

நான் பேசிக்கொண்டிருக்கும் போது 'இந்த ஒலி பெருக்கி நன்றாக வேலை செய்கிறதே' என்று எவரும் பாராட்டமாட்டார்கள், திடீரென்று இது வேலை செய்யாமல் நின்று விட்டால், உடனே எல்லோரும் 'இப்படி நின்று விட்டதே' என்று கவலைப்படுவார்கள்!

இங்கே எரிகின்ற விளக்குகள், எரிந்து கொண்டிருக்கும் போது 'அவை நன்றாக ஒளி தந்து கொண்டிருக்கின்றனவே எனக் கூறமாட்டார்கள், அவை திடீரென்று நின்று விட்டால் தான் 'நின்றுவிட்டதே' என்று கவலைப்படுவார்கள்!

அதைப்போல திருவண்ணாமலையில் தோற்றிருந்தால் நீங்களெல்லாம் எவ்வளவு பதறிப் போயிருப்பீர்கள்?

மாற்றுக் கட்சியினர் எவ்வளவு கிண்டல் கேலிகளை வீசியிருப்பார்கள்!

எத்தனை பேர் புத்தி சொல்

(6-ம் பக்கம் பார்க்க)

எதிர்காலம்-இருட்காலம்

0

தாய்மொழி—உலகத்தோடு பழக ஆங்கிலம், இரண்டுமிருந்தால் போதும். வீணே, இடையில் இந்தி என்றொரு மொழி வேண்டாம். எண்ணற்ற அறிவையும் விஞ்ஞான விளைவுகளையும் தந்த ஆங்கிலத்தால் நமக்கு ஏற்பட்ட பலனில் கடுகளவாவது கிட்டுமோ!! நிச்சயம் கிட்டாது—ஏனெனில் இந்திக்கு இப்போதுகூட வார்த்தைகள் தேடிக் கண்டு பிடித்து வருகிறார்கள்,

இந்நிலையில், "ஆங்கிலத்தை ஒழிப்போம்—இந்திக்கு அந்த இடத்தைத் தருவோம்" என்று சொல்வது அறிவு கண்களை மூடுவதாகத்தானே பொருள்? சொந்தக் கண்ணும் தாய்மொழியையும் அடைத்துவிட்டு, இருதய கண்ணையும் எடுத்தெறிந்து விட்டால் எதிர்காலம் இருள் மயமாவது தவிர, வழி என்ன?—இதைத்தான் எண்ணி பார்க்க வேண்டுகிறோம், நாம்.

கோவை குமாரின் அன்றைய கொக்கரிப்பு!

தமிழே படிப்பு-ஆட்சி-மொழி!!

சட்டம் தமிழில் வேண்டும்

இந்தியால் என்ன முடியும்?

ஆங்கிலத்திற்குப் பதிலாக இன்னொரு மொழியை ஏற்றுக் கொள்வதாயிருந்தால், அதற்கு ஆங்கிலமே இருந்துவிடலாம், ஏனென்றால் ஆங்கிலமொழியில் வளமிருக்கிறது. உலகம் பூராவும் வியாபித்திருக்கக் கூடிய மொழியாக இருக்கிறது.

நம்முடைய கல்வி பயனுள்ளதாக இருக்க வேண்டும். ஒரு மொழியைப் பயன்படக் கூடிய முறையில் உபயோகித்துக் கொள்ளவேண்டும் என்று சொல்லும்பொழுது அன்னிய மொழி இருக்கிற வரையில்—தாய்மொழி இல்லாத ஒரு மொழி இருக்கிற வரையில் கருத்துக்களைப் புரிந்துகொள்ள முடியாது. சிந்தனை சக்தியின் வளர்ச்சி சரியான முறையிலே ஏற்படாது என்ற அடிப்படையிலே பார்க்கும்பொழுது ஆங்கிலத்திற்கு இடமில்லை. இந்திக்கும் இடமில்லை.

அந்தந்தப் பகுதியிலே தாய்மொழிஎதுவாக இருக்கிறதோ அதுதான் போதனை மொழியாக வேண்டும் என்பதிலே யாருக்கும் அபிப்பிராயபேதம் இருப்பதற்கு இடமில்லை என்பது என்னுடைய கருத்து.

கல்லூரியிலே எந்த மொழி போதனை மொழியாக இருக்க வேண்டும் என்பது பற்றி கமிஷன் செய்திருக்கக்கூடிய சிபாரிசுகளை நாம் ஏற்றுக் கொள்வதற்கு தயாராக இல்லை. அதை அவர்கள் வெளிப்படையாதச் சொல்லாவிட்டாலும் சூசகமாகச்சொல்லியிருப்பது இப்பொழுதுஇருக்கக்கூடிய போக்கிற்கு விரோதமானது. அதை நாம் ஏற்றுக் கொள்ள முடியாது.

இன்றைக்கு போதனைமொழி ஆங்கிலத்தில் இருப்பதிலிருந்து மாறுதல் ஏற்படவேண்டுமானால் அது தாய்மொழியாகத்தான் இருக்க முடியும், அது பிராந்திய மொழியாகத்தான் இருக்க முடியும்என்கிற கருத்து நாம் இந்தச் சபையில் வற்புறுத்தியிருக்கிறோம். அது பற்றி இந்தச் சபையில் இருப்பவர்களுக்குமாறுபட்டகருத்து இருப்பதற்கு இடமில்லை என்பது என்னுடைய தாழ்மையான கருத்து மேல் சபையிலே இதற்கும் மேலான கருத்துக்கள் தோன்றலாம். இந்தச் சபையை பொறுத்த வரையிலே, நாம் சாதாரண மக்கள்.

சாதாரண மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள், சாதாரண அறிவுதான் நமக்கு உள்ளது. ஆனால் எனக்குத் தெரிந்தவரையிலே இதுதான் எல்லோரும் ஒப்புக்கொள்ளப்படுகிறது நியாயமானது, சிறந்தது என்று எனக்குத் தோன்றுகிறது. ஆகையினாலே இதுபற்றி அதிகமாகவிவாதிக்கவேண்டிய அவசியம் இல்லை என்று நினைக்கிறேன்.

நம்முடைய நிர்வாகம் அதாவது ராஜ்ய சர்க்காரை பொருத்த வரையிலே எந்த மொழியிலே இருக்க வேண்டுமென்பது பற்றி முடிவு செய்ய கூடிய பொருப்பு ராஜ்ய சட்டசபைக்குத்தான் விடப்பட்டிருக்கிறது. நமது அரசியல் சட்டத்திலே இதை பொருத்த வரையில் யாரும் இந்தமொழிதான் இருக்கவேண்டுமென்று எந்த ராஜ்ய சர்க்காரையும் நிர்பந்திக்க முடியாது. அந்த முறையிலே நாம் ஒரு முடிவு எடுத்துவிட்டோம்.

சென்ற பொதுத் தேர்தலுக்கு முன்பே இங்கு ஒரு சட்டம் இயற்றி விட்டோம். தமிழ்மொழிதான் சென்னை ராஜ்யத்தின் நிர்வாக மொழியாக இருக்கவேண்டும் என்பது பற்றி யாருக்கும் சந்தேகம் வந்து விடக் கூடாது. ஒரு சமயம் வேறு மொழியை இங்கே கொண்டு வரலாம் என்று ஆசைப்பட்டுக் கொண்டிருந்ததால் அதனால் இங்கு வேறு மொழி வந்து விடக்கூடும். வேறு யாராவது அம்மாதிரி நீக்கக்கூடியமுறையிலே இங்கு இருப்பவர்களின் பயத்தைபோக்கக்கூடிய முறையிலே இதுபற்றி சட்டம் இயற்றி விட்டோம்,

தமிழை நிர்வாக மொழியாகக் கொண்டு வருவதற்கு பல முயற்சிகள் எடுத்துக் கொள்ளவேண்டியது அவசியம் என்பதை எல்லோரும் இச்சபையிலே ஒப்புக் கொண்டிருக்கிறோம். இந்த அடிப்படையிலே பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன படிப்படியாக தமிழ்மொழி நிர்வாக மொழியாக வரும் என்பதை வலியுறுத்துகின்ற முறையிலே பொங்கல் திருநாளன்று 1000அலுவலகங்களில்நிர்வாக மொழியாகதமிழ்இருக்கவேணடுமென்று உத்தரவு பிறபித்தோம். அவைகளில் தமிழ் மொழி ஆட்சி மொழியாக இன்றைக்கு இயங்கி வருகிறது. இதே மாதிரி தொடர்ந்து மேலும் பல வேறு நிர்வாகத் துறைகளிலே தமிழ் இடம் பெறும் என்பது பற்றி யாரும் சந்தேகப்பட வேண்டியதில்லை. நாம் இந்தச் சபையில் இருக்கும் வரையில்.

அடுத்தப்படியாக இருக்கக் கூடிய பகுதியில் இந்தமாகாண மொழியாக எந்த மொழியை வைத்துக் கொள்ளலாம் என்ற விவாதத்தைப் பொருத்த வரையில் முடிவு செய்யக் கூடியது நாம்தான் இங்கே எந்த மொழியிலே நிர்வாகத்தை நடத்த வேண்டும், நடவடிக்கைகளை நடத்த வேண்டுமென்றும் முடிவு செய்யக் கூடிய பொறுப்பு நமக்குத்தான் ஏற்பட்டிருக்கிறது. ஆனால் கமிஷன் கொஞ்சம் மாறுபட்ட கருத்தைத் தெரிவிக்கின்றது, ஆனால் நம்முடைய கருத்து இங்கே செய்யப்படும் சட்டங்களெல்லாம் தமிழிலேயே செய்யப்படவேண்டும்.

அதற்கேற்ற காலம் வரும் போது உத்தரவுகள் போடும் போது தமிழிலேயே போடவேண்டும்.

அவை இந்தியா பூராவுக்கும் பயன்படக்கூடிய வகையிலே ஒரு ஏற்பாடு செய்யவேண்டுமானால் இந்தியிலே மொழி பெயர்த்துக் கொள்ளட்டும்! அலலது ஆங்கிலத்திலேயோ வேறு பொது மொழியிலேயோ மொழி பெயர்த்துக் கொள்ளட்டும் என்று சொல்லலாமே ஒழிய, சட்டம் இங்கு விவாதிக்கப்படும்பொழுது சட்டமூலம் ஆங்கிலத்தில் இருக்கிறது.

அங்கு மாறுதல் ஏற்படும் பொழுது இந்தியிலே சட்டமூலத்திலே வைத்துத்தான் நாம் இங்கு விவாதிக்க வேண்டுமென்ற அடிப்படையை நாம் ஒப்புக்கொள்வதற்கு தயாராக இல்லை. நம்முடைய ராஜ்யத்தில் தமிழிலும் மற்ற மற்ற இராஜ்யங்களில் பிராந்திய மொழிகளிலும் சட்டசபை நடவடிக்கைகள்நடத்த வேண்டும்.

முன்னாள் நிதியமைச்சர்
சி. சுப்பிரமணியம்
10 மார்ச் 1958.

√(5-ம் பக்கத் தொடர்ச்சி)

லக் கிளம்பி யிருப்பார்கள்!

"இந்த அண்ணாதுரை, இனியாவது பிரிவினைக் கொள்கையை கைவிடுவார் என்று எதிர்பார்க்கிறேன்" என்று சிலர் பேச ஆரம்பித்திருப்பார்கள்!

இன்று கிடைத்துள்ள வெற்றி ப. உ. சண்முகத்துக்கு மட்டும் கிடைத்த வெற்றியல்ல—சனநாயகத்துக்குக் கிடைத்த வெற்றியாகும்!

இராமன் வனவாசய்கூட 14 வருடங்கள்தான்! இந்த காங்கிரசு ஆட்சியில் 15 வருடங்கவாக மக்கள் 'வனவாசம்' அனுபவிக்க நேர்ந்ததால்—ஆளுங் கட்சியைத் தட்டிக் கேட்கும் வலிவு ஒவ்வொரு மாநிலத்திலும் இல்லாததால் மக்களுக்கு ஒருவித பீதி ஏற்பட்டுவிட்டது. "நாம் ஏன் எதிர்த்து 'நாசமாக' வேண்டும்? ஊருடன் ஒத்துப் போவோம்" என்ற அரசியல் வைதீக மனப்பான்மை ஏற்

(7—ம் பக்கம் பார்க்க)

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

பட்டுவிட்டது.

அந்த வைதீகத்தை முறியடிக்க முடியும் என்ற நம்பிக்கையை திராவிட முன்னேற்றக் கழகம் ஏற்படுத்தி யிருக்கிறது.

ஆகையினுல் மற்ற அரசியல் கட்சிகளுக்குப் பணிவன்புடன் கூறிக்கொள்வேன், காங்கிரசார் நாடாள வேண்டுமென்று நீங்கள் மனதார நம்பினுல் நீங்கள் உங்கள் கட்சிகளைக் கலைத்துவிட்டு காங்கிரசில் சேருங்கள்.

அதுவே நேர்மை, அதுவே நாணயம், அதற்கு நான் தலை வணங்குவேன். உண்மையான காங்கிரஸ்காரனுக்கு நான் எப்போதும் தலை வணங்குகின்றவன்.

அதைப்போலவே உண்மையான சனநாயகவாதி சுதந்திராக் கட்சியிலே யிருந்தாலும் கம்யூனிஸ்டுக் கட்சியிலே யிருந்தாலும், லீக்கிலே யிருந்தாலும் குடிரசுக் கட்சியிலே யிருந்தாலும் அவர்களுக்கு நான் தலை வணங்குவேன்.

ஆனுல். எனக்கு என்று ஒரு கட்சி உண்டு. அதற்கு :என்ன வேலை என்ருல் அந்தக் கட்சிக்கு வேலை செய்வது என்று சொன்னுல் உள்ளபடி அரசியலில் என்னுல் புரிந்து கொள்ள முடியாத புதிராக இருக்கிறது.

மற்ற கட்சிகள் காங்கிரசுடன் உறவு வைத்துக் கொண்டிருப்பதற்குப் பெயர் கூட்டுறவு அல்ல மகன் செத்தாலும் பரவாயில்லை மருமகள் பின்னுல் உட்கார்ந்து அழுதால் அதுவே போதுமென்ற கொடுமைக்கார மாமியார் மனப்பான்மையை அரசியலில் வைத்துக் கொண்டிருக்கிருர்கள்.

இது மறுமணம் செய்து கொள்ளுகின்ற காலம். உன் மகனும் செத்து மருமகள் வேறு கல்யாணம் செய்து கொண்டால் என்ன செய்வாய்

அப்படிப்பட்ட கொடுமைக்கார அரசியல் மாமியாராக நீங்கள் இல்லாமல் சனநாயகத்தைக் காப்பாற்ற வேண்டுமானுல் முதலில் காங்கிரசை வீழ்த்த நாமெல்லாம் ஒன்று சேரலாம்.

இதில் நான் மறுத்துவிட்டேன் என்ருல் இரண்டாவது ரவுண்டு உனக்கு வலிவு இருந்தால் என்னைப் பார்த்துக் கொள்.

கம்யூனிஸ்டு கட்சியானுலும் எந்தக் கட்சியானுலும் அவர்கள் வலிவு பெறுகிருர்கள் என்ருல், தாங்கள்தான் இருக்க வேண்டும் இன்னொரு ஆட்சி இருக்கக் கூடாது என்ற எண்ணம் வந்து அவர்கள் என்னை ஒழிக்க ஆரம்பித்தால் நான் அவர்களிடத்தே போய் கெஞ்சிக் கூத்தாட மாட்டேன்.

அதற்குத்தான் நான் மதுரையிலே நடைபெற்ற மாநாட்டிலே சொன்னேன்.

இந்த நாட்டில் பல அரசியல் கட்சிகள்தான் இருக்கும். அதுதான் இந்த நாட்டின் பண்பு—இந்த நாட்டு மக்களுடைய மனவளம் பல கட்சிகளைத்தான் ஏற்படுத்தும்.

எல்லாக் கட்சிகளையும் ஒன்ருகச் சேர்த்து காங்கிரசுக் கட்சியை எதிர்க்க வேண்டும் என்பது அரசியலில் உபதேசத்திற்குப் பயன் படுத்தலாமே தவிர பத்திரிகைகளில் தலையங்கம் எழுதப் பயன்படுத்தலாமே தவிர, நடைமுறைக்கு ஒத்து வராது.

ஆகையினுல் இருக்கின்ற பல்வேறு கட்சிகளும் ஒன்றை ஒன்று அழித்துக் கொள்ளாமல் எல்லாக் கட்சிகளும் அவரவர்களுக்குள்ள வலிவோடு சட்ட மன்றத்தில் அமர வேண்டுமானுல் மதுரையிலே நான் சொன்னபடி 'ப்ரபபேசனல் ரெப்ரசன்டேசன்' அவரவர்களிருக்கின்ற ஆதரவுக்குத் தக்கபடி சட்ட மன்றத்தில் இடம் பெற்று ஒரு அரசியல் மாற்றம் ஏற்பட்டாலொழிய நம்முடைய நாட்டு அரசியலில் ஒரு தெளிவு கிடைக்காது.

தொகுப்பு —அ. மாசிலாமணி

(2-ம்பக்கம் தொடர்ச்சி)

பேசி தறுதலையாட்டம் ஆடியிருக்கிருர் !!

அதற்கு, ஒரு போரமைச் சரே பலியாகியிருக்கிருர் ! அழகி கீலரின் நிகழ்ச்சி, கெட்ட கனவு. காலராவின் கெடுதல்களை பற்றிச் சொல்லும்போதுதான், :அதுவராமல் தடுக்க வேண்டும் என்கிற உறுதி ஏற்படுகிறது. அதனுலே, சர்க்காரையேச் சந்திக் கிழுத்த சரசவல்லி'யான கீலரைப் பற்றியும் அவளைத் தயாரித்த பெரிய மனிதர் டாக்டர் வார்டைப்பற்றியும் எழுதலானேம்.

அடுத்த கிழமை, கீலர் வலையில் புரொப்யூமா வீழ்ந்ததன் விபரங்கள்.

(தொடரும்)

நீங்கள் எந்த வேலை செய்தாலும்...

செய்யும் வேலை
நாட்டிற்காக
செய்யப்பட்டதாகும்

திறமை, பலம், இதற்காக பாடுபட்டு வரும் இந்தியாவின், நீங்கள், உங்கள் வாழ்வு, செய்யும் வேலை ஒவ்வொன்றும் ஒரு அங்கமாகும். திறமையில்லாமை, மரியாதை இல்லாமை ஆகியவைகளுக்கு இடமே கிடையாது. உங்கள் வேலை எதுவாக இருந்தாலும் அதை திறமையுடன் செய்யுங்கள். தாமதத்தை தவிருங்கள். சுமுகமாக செயல்படச் செய்யுங்கள். நம் செயல் திறன் உயர உறுதியுடன் உழைத்து வெற்றிக்கான வழியை வகுப்போம்.

உறுதியாக உழையுங்கள்

அதிக உற்பத்திக்கும், பலமான பாதுகாப்புக்கும் அது தேவை

DA 62/F 9

பதிவு எண்: எம். 7466

அறப்போர்

இலங்கையில் செய்தித்தாளாகப் பதிவு செய்யப்பட்டது.

கேள்வி பதில்

கே: "தி. மு. க வின் பிரிவினைக் கொள்கை நீடித்தால் இது பற்றி அரசு தக்க நடவடிக்கை எடுக்கும்" என்று அமைச்சர் பக்தவத்சலம் கூறியிருப்பதைப் பற்றித் தங்கள் கருத்தென்ன?

—கே. பக்கிரிசாமி,
விழுந்தமாவடி

ப: எப்போதுதான் அவர் இப்படி சொல்லாமல் இருந்தார்! கழகத்தின் நடவடிக்கைகளுக்கு முட்டுக்கட்டை போட புதிதாக ஒரு சட்டம் வரும் என்று சொன்னார்கள். இப்போது "இருக்கிற சட்டத்திலேயே இடமிருக்கிறது" என்கிறார்கள், கழகத்தார் எதிர்ப்பார்கள் என்று தெரிந்ததும். கிலி பிடித்தவனுடைய உளறலுக்கும் காங்கிரஸ் அமைச்சர்கள் பேச்சுக்கும் இப்போது வித்தியாசமில்லை! அதிலும் 'திருவண்ணாமலைக்குப்' பிறகு கிலி அதிகமாகியிருக்கிறது!! நடவடிக்கை எடுக்குமாம் அரசு!! எடுக்கட்டுமே!!

0 0 0

கே: "திருவண்ணாமலை தேர்தல் பிரிவினைக்குக் கிடைத்த வெற்றி என்கிறார்கள். பிரிவினைப் பற்றி பேசினால் தடை செய்வோம் என்று சர்க்கார் மிரட்டினால் நாங்கள் எங்கே பிரிவினையைப்பற்றி பேசினோம் என்கிறார்கள்- இப்படி இரட்டை நாக்கு படைத்தவர்களாக தி. மு. கழகத்தார் இருக்கிறார்கள்' என்று குட்டிக் காங்கிரஸ் தலைவர் பேசியிருக்கிறாரே....

—கே. சோதி,
தஞ்சை.

ப: அவர் எதைத்தான் பேசாமலிருக்கிறார்! எப்போது பிணம் விழும், தின்னலாம் என்று தவிக்கும் கழுகுக்கும் அவருடைய பேச்சுக்கும் வித்தியாசம் கிடையாது. விட்டுத் தள்ளுங்கள் வேலையற்றவர் பேச்சை!!

0 0 0

கே: கலைஞர் கருணாநிதி திருவண்ணாமலை தேர்தல் பரிசாக மற்றக் கட்சிகளுக்கு வழங்கியதைப் பற்றி "அடக்கம் வேண்டும்" என்பதாக அறிவுரை சொல்ல வந்த ம. பொ. சி யை எதற்கு ஒப்பிடுகிறீர்கள்?

—ராஜி,
கருந்தட்டான்குடி.

ப: தொட்டாற்சிணுங்கியும் அரசியல் நோயாளியும் ஒரே செடியில் தொங்கும் இலைகள்!

° ° °

கே: காமராசர் இப்போது எப்படி யிருக்கிறாராம்?

—இ. சுந்தர்,
சென்னை-6.

ப: தேர்தல் முடிவு வெளி வந்த அன்று அவருடைய நண்பரிடம் தன்னுடைய கட்சியில் வேலை செய்ய சரியான ஆள் இல்லை என்று சொல்லி அங்கலாய்த்துக் கொண்டாராம்!

தாய் தடுத்தாலும் விடேன் !

புண்பட்ட உள்ளத்துக்கு மருந்திடுவர், அன்புள்ளம் கொண்டவர்கள். அதனால்தான், அமைதியான ஆர்ப்பாட்டங்கள் மூலம், தமது அதிருப்தியை அரசுக்கு தெரிவிக்கிறது, நாடு. அவ்விதம் தெரிவித்தபோதிலும், "புண்பட்ட உள்ளமா? இதோ, அம்பு எய்கிறேன்!" என்று உத்தரவு மேல் உத்தரவிடுவோரை என்னவென்று சொல்வது?

தென்னகம் எதிர்க்கிறது இந்தியை!—தெரியும் டில்லிக்கு, தென்னகம், இந்தி எதிர்ப்புநாள் கொண்டாடுகிறது!——தெரிந்திருக்கவேண்டும் அரசுக்கு.

இருந்தாலும், தாக்கீது அனுப்புகிறது! கட்டாயமாக்கும்படி.

என்னென்பது இதனை! அமைதி வழியையும், அன்பு மார்க்கத்தையும், தமது குறிக்கோளாகக் கொண்டு வாழும் தென்னகத்தின் எழுச்சியைப் பார்த்துக் கேலி செய்கின்றது போலும் டில்லி! அன்றோர் நாள், தமிழர்தம் வீரத்தை பழித்த வடவருக்கு புத்தி புகட்டினன் சேரன் செங்குட்டுவன் என்கிற வரலாறு உண்டு.

இமயத்தில் கொடி பொறித்தோனும், கங்கைக் கரையை உழுதவனும், தமிழ் மண்ணில் உண்டு. அத்தகைய வீரமரபினை கேலி செய்கின்றனர், வடவர். நக்கீரர் எனும் புலவர் வீற்றிருந்த பட்டிமன்றம் ஒன்றிலே, எம்மொழி சிறந்தது எனும் சர்ச்சை உண்டாக, ஆனந்தக்குயவன் என்பான் வடமொழியே சிறந்த மொழியென்று வாதிட்டு, தமிழை இழித்துரைத்து சீரழிந்தான் என்று கதை கூறி, வியந்துரைக்கும் புகழ்க்காதைகள் கூறுவோரும் உண்டு!!

தமிழை, கண்ணாக, உயிராக, செல்வமாக, வாழ்வாக எண்ணியெண்ணி இறும்பூதெய்திடும், புது எழுச்சி மலர்ந்து மணம் வீசுகின்றது இதுபோது! தமிழை பழித்தவனைத் தாய் தடுத்தாலும் விடேன் என்று கவிஞர் சூளுரைக்கின்ற காலம் இது!! இப்போது, வடவர், தென்னகம் கண்டிக்கிறதென அறிந்தும். இந்தியை, குழந்தைகள் தலையிலும் சுமத்த தாக்கீது அனுப்பியுள்ளனராம்!

உண்மையில், டில்லி தான் செய்திடும் தவறுகளுக்குப் பரிகாரம் காணவேண்டும்—இந்தியை அரசாங்க மொழியாக்க வேண்டும் என்று கொண்டிருக்கும் வெறியினைத் தளர்த்திக் கொள்ள வேண்டும் என்று நாடு எதிர்ப்பார்க்கின்ற நேரத்தில் வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவதுபோல, இந்தச் செய்தி வருகிறது—இந்தியை கட்டாயமாக்கும்படி.

டில்லியின் போக்கு, திரும்புமா, இதே வெறி நீடிக்குமா, என்பதைப் பொறுத்துப் பார்த்த பிறகு, வளர்ந்திடும் தமிழுக்கு கவிதையாரங்களும் அன்பு மலர்களும் சொரியும் அனைவருக்கும் 'வேலை' இருக்கிறது நிரம்ப! வடவரின் வெறி தணிந்துவிட்டால் சரி!!

இன்றேல் இன்னொரு 'அறப்போர்' தென்னகத்தில் எழக் கூடிய கட்டம், ஏற்பட்டே தீரும். குட்டக் குட்ட குனிவதுதான் தமிழர் தம் பரம்பரைக்கு, இந்த விடுதலையுகத்தில் வழங்கப் படும் மதிப்பா, என்பதைப் பார்த்துவிடக் வேண்டிய சந்தர்ப்பம் நெருங்கிக் கொண்டிருப்பதாகவே நினைக்கிறோம். அதனால் தான் திருவண்ணாமலை தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம், நாட்டவருக்கு அழைப்பு விடுத்தது! திருவண்ணாமலை மக்களும் ஏற்றுக்கொண்டார்கள். தாழ்ந்தனும் வீறுகொண்டெழுகின்ற காலம் இது! இப்போது வேண்டுமென்றே நாம் தாழ்த்தப்படுவதை எப்படி சகிக்க முடியும்?

முல்லை மலருக்கு எருக்கம் பூவா எசமானன்! குயிலுக்ுக் கோட்டானா ஆசிரியன்—இல்லை, ஒருபோதும் இந்த அநீதியை நீடிக்கவிடுவோர் தென்னகத்தில் இல்லை! புது எழுச்சி, பூத்து வருகிறது! இந்த எழுச்சி வெல்லும்—தாய் மொழிக்கு ஊறு செய்வோரை தாய் தடுத்தாலும் விடாது, முறியடிக்கும்!! இது உறுதி! உறுதி!! உறுதி!!!

ஆசிரியரும் வெளியிடுபவரும்: இராம. அரங்கண்ணல், 9-ஏ, சர். சி.பி. ராமசாமி ரோடு, அபிராமபுரம், சென்னை-18.
அச்சிட்டோர் : எம். பி. சத்தியமூர்த்தி, முல்லை அச்சகம், 3-40, மவுண்ட் ரோடு, சென்னை-6